**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF JUDGE.**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**
**O.S. NO.299/2017**

Deposition of the witness: PW2.
Date :22.01.2026

Solemnly affirmed by Mrs. R. Sathya Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | |
|---|---|
| Name | பவித்ரா |
| Father’s Name | மணிகண்டன் |
| Village | வடிவீஸ்வரம் |
| Taluk | அகஸ்தீஸ்வரம் |
| Calling | இல்லத்தரசி |
| Age | 28 |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்திற்கு நான் எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனது மாமா என்னை கேட்டுக்கொண்டார். நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரத்தை நான் வழக்கறிஞரிடம் சொன்னேன். அதில் 5 வது பாராவில் காவல் துறையில் வழக்கு தாக்கல்செய்ததாக சொல்லியிருப்பதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வக்கீலிடம் தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கின் 5 ம் பிரதிவாதி யார் என்றால் வேலப்பன் ஆவார். உண்மையில் இந்த வழக்கின் வவிவரம் எதும் தெரியாமல் எனது மாமா

கேட்டுகொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது நிருபண வாக்குமூலத்தில் 5ம் பிரதி தொடர்பாக சொல்லப்பட்ட விவரங்கள் தவறானவை என்றாலும் சரியல்ல.